41138

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**16 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025(2026)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025(2026)
General Certificate of Education (Ord. Level) Examination, 2025(2026)

ඉස්ලාම් I, II
இஸ்லாம் I, II
Islam I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## இஸ்லாம் I

**அறிவுறுத்தல்கள் :**

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
* உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** பூமியில் மனிதன் அல்லாஹ்வின் பிரதிநிதியாக இருந்து அதனை நிர்வகிக்கும் பொறுப்பு எவ்வாறு அழைக்கப்படும்?
(1) இபாதத் (2) இமாரத் (3) கிலாபத் (4) ரிஸாலத்

**2.** நபி மூஸா (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட ஸுஹுபுகளின் எண்ணிக்கை யாது?
(1) 10 (2) 20 (3) 30 (4) 50

**3.** தொழுகையில் "ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதா" என எப்போது ஓதப்படும்?
(1) ருகூஉ செய்யும்போதாகும்.
(2) ருகூவிலிருந்து நின்ற நிலைக்கு வரும்போதாகும்.
(3) ஸஜ்தா செய்யும்போதாகும்.
(4) நடு இருப்புக்கு வரும்போதாகும்.

**4.** நபி முஹம்மது (ஸல்) அவர்களினதும் ஸஹாபாக்களினதும் வழிமுறையைப் பின்பற்றக்கூடியவர்கள் எவ்வாறு அழைக்கப்படுவர்?
(1) காதியானி (2) முஃதஸிலா
(3) அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஆ (4) ஷீஆ

**5.** மறுமை வாழ்வுடன் தொடர்புடைய விடயங்களை உள்ளடக்கும் பிரிவை அறிஞர்கள் எவ்வாறு விளக்குகின்றனர்?
(1) அல்-இலாஹிய்யாத் (2) அந்நுபுவ்வாத்
(3) அர்-ருஹானிய்யாத் (4) அஸ்ஸம்இய்யாத்

**6.** சமூகத்துக்குத் தேவையான பெண் மகப்பேற்று வைத்தியர்கள் உருவாக வழிவகுப்பது இஸ்லாமிய கடமைகளில்
(1) பர்ளு ஐன் எனப்படும். (2) பர்ளு கிபாயா எனப்படும்.
(3) மக்ரூஹ் எனப்படும். (4) ஸுன்னத் எனப்படும்.

**7.** பின்வருவனவற்றுள் அல்-மாஉத் தஹூர் அல்லாத நீர் வகை
(1) கடல் நீர் (2) ஊற்று நீர் (3) இளநீர் (4) மழை நீர்

**8.** ஒரு முஃமினுக்கும் காபிருக்கும் இடையில் உள்ள வேறுபாடு என நபி (ஸல்) அவர்கள் எதனைச் சுட்டிக்காட்டினார்கள்?
(1) தொழுகையை கைவிடுவது (2) நோன்பு நோற்காதிருப்பது
(3) வசதியிருந்தும் ஹஜ்ஜை நிறைவேற்றாதிருப்பது (4) நயவஞ்சகத்தனமாக நடப்பது

**9.** சுப்ஹு தொழுகைக்குப் பின் நபி (ஸல்) அவர்கள் கலிமதுத் தௌஹீதை எத்தனை முறை ஓதினார்கள்?
(1) 03 (2) 07 (3) 10 (4) 33

[பக். 2 ஐப் பார்க்க

10. பின்வருவனவற்றுள் உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்தல் என்பதைக் குறிக்கும் பதம் யாது?
(1) அத்தஹாரத் (2) தஸ்கியதுன் நப்ஸ்
(3) நப்ஸுல் லவ்வாமா (4) நப்ஸுல் முத்மஇன்னா

11. தொழுகையை முறையாகப் பேணிவந்த போதும் பூனை ஒன்றுக்கு உணவு வழங்காது கட்டி வைத்தமைக்காக ஒரு பெண் நரகம் சென்றதாகச் சொல்லப்படும் சம்பவம்
(1) அல்-குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளதாகும். (2) நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டதாகும்.
(3) கலீபாக்களில் ஒருவரின் கூற்றாகும். (4) பிரபல இஸ்லாமிய அறிஞர் ஒருவரின் கூற்றாகும்.

12. இவ்வுலகின் நிரந்தரமற்ற தன்மையை குறித்து நிற்கும் இஸ்லாமிய சொற்றொடர்
(1) தாருல் பகா (2) தாருல் ஃபனா (3) தாருஸ் ஸலாம் (4) தாருல் ஹிக்மா

13. தெளிவான இஜ்மாஉவை முஜ்தஹிதுகள் எவ்வாறு அழைப்பர்?
(1) இஜ்மாஉல் அக்ஸரிய்யா (2) இஜ்மாஉ ஸுகூதி
(3) இஜ்மாஉ ஸரீஹ் (4) இஜ்மாஉல் அறப்

14. குல்லதைனுக்குக் குறைந்த நீரில் நஜீஸ் விழுந்துள்ளது. இருப்பினும் அதன் சுவை, நிறம், மணம் என்பவற்றில் எந்த மாற்றமும் நிகழவில்லை. இந்நீரை வுழுச் செய்வதற்கு
(1) பொதுவாகப் பயன்படுத்தலாம்.
(2) பயன்படுத்தக்கூடாது.
(3) பயன்படுத்தாமலிருப்பது நல்லது.
(4) நிர்ப்பந்தமான சந்தர்ப்பத்தில் மட்டும் பயன்படுத்தலாம்.

15. பின்வருவனவற்றுள் 'வஹி' என்ற சொல்லின் பொருள் **அல்லாதது**
(1) உதிப்பு ஏற்படல் (2) இரகசியம் பேசுதல் (3) தூது சொல்லல் (4) இதமாகப் பேசுதல்

16. தயம்முமின் உறுப்புகளை மட்டும் கொண்ட தெரிவு யாது?
(1) முகமும் இரு கைகளும் (2) முகமும் இரு கால்களும்
(3) முகமும் தலையும் (4) முகம், தலை, இரு கைகள் ஆகியன

17. குறைஷிகளின் கொடுமைகளைத் தாங்க முடியாமல், நபி (ஸல்) அவர்கள் தனது தோழர்களை எந்தப் பிரதேசத்துக்கு முதன்முதலாக ஹிஜ்ரத் அனுப்பி வைத்தார்கள்?
(1) ஹபஷா (2) மதீனா (3) தாயிப் (4) யெமன்

18. பின்வருவோரில் ஓர் ஆணுக்கு திருமணம் முடிக்க அனுமதிக்கப்பட்ட பெண்
(1) தந்தையின் சகோதரனின் மகள் (2) பால்குடி முறைச் சகோதரி
(3) பால்குடிச் சகோதரியின் மகள் (4) தந்தையின் மனைவியின் மகள்

19. நபி (ஸல்) அவர்கள் ஐந்து நிகழ்வுகள் இடம்பெறுவதற்கு முன்னர் ஐந்து வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் எனப் பணித்தார்கள். அவற்றிலொன்று
(1) மாலை வருவதற்கு முன் காலையைப் பயன்படுத்தல்
(2) நோய் வருவதற்கு முன் ஆரோக்கியத்தைப் பயன்படுத்தல்
(3) துன்பம் வருவதற்கு முன் மகிழ்ச்சியைப் பயன்படுத்தல்
(4) பகைமை வருவதற்கு முன் உறவைப் பயன்படுத்தல்

20. ஒரு நபித்தோழரின் ஆலோசனைகளுக்கு அமைவாக சில சந்தர்ப்பங்களில் அல்-குர்ஆன் வசனங்கள் (வஹி) அருளப்பட்டன. அந்த நபித்தோழர் யார்?
(1) அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழி) (2) ஸைத் இப்னு தாபித் (ரழி)
(3) உமர் இப்னுல் கத்தாப் (ரழி) (4) அலி இப்னு அபீ தாலிப் (ரழி)

21. அல்-குர்ஆனின் அட்சரங்களுக்கு உயிர்க்குறி இட்ட பிரபல அறபுமொழி இலக்கண மேதை யார்?
(1) கலீல் இப்னு அஹ்மத் அல்பராஹீதி (2) இமாம் சீபவைஹி
(3) அபுல் அஸ்வத் அத்துஅலி (4) அபுல் காசிம் மஹ்மூத் அஸ்-ஸமஹ்ஷரீ

22. இஸ்லாத்திற்கு முற்பட்ட காலத்து அறேபியர் தமது சர்வதேச வர்த்தக நடவடிக்கைகளின்போது, இலங்கையை ஒரு பிரதான தங்குமிடமாகக் கருதியமைக்கான காரணம் யாது?
(1) இலங்கை ஒரு தனித்த தீவாக அமைந்திருந்தமை
(2) அரபிகளுக்கு சிங்கள மன்னர்களுடனான தொடர்பு காணப்பட்டமை
(3) இலங்கை ஒரு சுற்றுலா மையமாக விளங்கியமை
(4) கிழக்கையும் மேற்கையும் இணைக்கும் வணிகப் பாதையின் மத்தியில் இலங்கை அமைந்திருந்தமை

[பக். 3 ஐப் பார்க்க

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

23. 1981ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கம் தேசிய முஸ்லிம் முன்னோடிகளில் ஒருவரை கௌரவித்து முத்திரை வெளியிட்டது. அவர் யார்?
(1) எம். சீ. எம். கலீல் (2) டீ. பீ. ஜாயா (3) மாக்கான் மாக்கார் (4) ஏ. எம். ஏ. அஸீஸ்

24. கணவன், மனைவியின் இணைப்பை விளக்குவதற்கு அல்-குர்ஆன் பயன்படுத்தும் சொல்
(1) அஸ்ஸிவாஜ் (2) அஸ்-ஸப்ர் (3) அர்-ரிஸ்க் (4) அஸ்-ஸகன்

25. ஒரு கர்ப்பிணித் தாயின் இத்தா கால எல்லை யாது?
(1) குழந்தையைப் பிரசவித்தல் வரையான காலமாகும்.
(2) 4 மாதங்களும் 10 நாட்களும் ஆகும்.
(3) 4 மாதங்கள் ஆகும்.
(4) 3 மாதவிடாய் காலமாகும்.

26. இஸ்லாத்தினதும் முஸ்லிம்களினதும் சிறப்பம்சங்களைப் பாடிய கவிஞர் **அல்லாதவர்**
(1) ஹஸ்ஸான் இப்னு தாபித் (2) அப்துல்லாஹ் இப்னு ரவாஹா
(3) க.்.ப் இப்னு மாலிக் (4) இம்றுஉல் கைஸ்

27. பின்வருவனவற்றுள் அகீதா தொடர்பாக ஒரு முஸ்லிமின் நடத்தை எவ்வாறு **அமையக்கூடாது?**
(1) அல்-குர்ஆனில் அடங்கியுள்ள அகீதா ரீதியான கருத்துக்களைப் புரிந்து செயற்படல்
(2) இறைத்தூதர் போதித்த அகீதாவை அதன் அசல் வடிவில் பின்பற்றல்
(3) அகீதா தொடர்பான சர்ச்சைகளை ஏற்படுத்தல் போன்றவற்றிலிருந்து தவிர்த்துக் கொள்ளல்
(4) பகுத்தறிவை மட்டும் பயன்படுத்தி அகீதா ரீதியான விளக்கங்களைப் பெற்று முழுமையாகப் பின்பற்றல்

28. பின்வருவனவற்றுள் நபிமார்கள், ரசூல்மார்களின் விசேட தன்மைகளை வெளிப்படுத்தும் அம்சம் யாது?
(1) 'இஸ்மத்' எனும் பண்பைப் பெற்று பாவங்களிலிருந்து பாதுகாப்புப் பெற்றிருத்தல்
(2) சுவனத்தைக் கொண்டு சுபசெய்தி சொல்லப்பட்ட பத்து பேர் அவர்களில் உள்ளடங்கியிருத்தல்
(3) 'கராமத்' எனும் சிறப்பம்சம் அவர்களுக்கு வழங்கப்பட்டிருத்தல்
(4) அல்லாஹ் ஏவிய பணிகளில் ஈடுபட்டு, அவனுக்கு எவ்வகையிலும் மாறுசெய்யாதிருத்தல்

29. "பிஸ்மில்லாஹி தவக்கல்து அலல்லாஹ்" எனும் துஆ எச்சந்தர்ப்பத்தில் ஓதப்படும்?
(1) உறக்கத்திலிருந்து விழித்தெழும்போது (2) பள்ளிவாயிலுக்குள் நுழையும்போது
(3) மலசலகூடத்திலிருந்து வெளியேறும்போது (4) வீட்டைவிட்டு வெளியேறும்போது

30. "மறுமை நாளில் ஒரு மு.்.மினின் தராசில் நல்லொழுக்கத்தை விட பாரமானதாக எதுவும் இருக்கப்போவதில்லை" எனும் கூற்று
(1) அல்-குர்ஆன் வசனமாகும்.
(2) நபி (ஸல்) அவர்களின் ஹதீஸாகும்.
(3) உமர் (ரழி) அவர்களின் கூற்றாகும்.
(4) உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களின் கூற்றாகும்.

31. பின்வருவனவற்றுள் மஸ்ஜிதுல் அக்ஸாவின் தனிச்சிறப்பு
(1) அது இவ்வுலகில் அமைக்கப்பட்ட மஸ்ஜிதுகளில் முதன்மையானது.
(2) அங்கு நிறைவேற்றப்படும் ஒரு தொழுகை ஐநூறு தொழுகைகளுக்குச் சமமாகும்.
(3) அது முதன்முதலில் ஆதம் (அலை) அவர்களால் நிர்மாணிக்கப்பட்டது.
(4) அது இஸ்லாத்தில் இரண்டாவது ஆன்மீக அந்தஸ்தைப் பெற்ற பள்ளிவாயிலாகும்.

32. ஸகாத் வழங்குவதில் ஒரு முஸ்லிம் பின்பற்ற வேண்டிய சரியான நடைமுறை
(1) தனது பராமரிப்பின் கீழ் வாழ்வோருக்கு ஸகாத்தை வழங்குதல்
(2) அனுமதித்த தேவை ஒன்றுக்காக கடன் பெற்றவனுக்கு ஸகாத் வழங்குதல்
(3) பொருள் நிஸாப் அடையும் முன்னரே ஸகாத் வழங்குதல்
(4) நன்மை கருதி ரமழான் காலங்களில் ஸகாத் வழங்குதல்

33. பின்வருவனவற்றுள் எந்த அற்புதம் நபி மூஸா (அலை) அவர்களுடன் தொடர்புடையது?
(1) சுட்டெரிக்கும் நெருப்பை சாந்தியளிக்கும் குளிராக மாற்றியமை
(2) இலை தழைகளைப் பறிக்கப் பயன்பட்ட கைத்தடியைப் பாம்பாக மாற்றியமை
(3) குஷ்டரோக நோயாளிகளைக் குணப்படுத்தியமை
(4) கருங்கற் பாறையிலிருந்து ஒட்டகம் அற்புதமாக வெளியேறியமை

[பக். 4 ஐப் பார்க்க

41138

34. பின்வருவனவற்றுள் தௌஹீத் தொடர்பான **பிழையான** கூற்று யாது?
(1) யார் அல்லாஹ்வுக்கு இணை கற்பிக்கிறாரோ அவருக்கு சுவர்க்கம் ஹராமாகும்.
(2) ஒவ்வொரு முஸ்லிமும் தௌஹீதைப் புரிந்து செயற்படுவது அவசியமாகும்.
(3) இறை தூதர்கள் தௌஹீதை ஏற்று வாழுமாறு மக்களுக்கு அழைப்பு விடுத்தனர்.
(4) தௌஹீத் இன்றி செய்யப்படும் நற்செயல்களுக்கு மறுமையில் கூலி வழங்கப்படும்.

35. பின்வருவனவற்றுள் ஒரு முஸ்லிமின் ஒழுக்கம் தொடர்பான **பிழையான** கூற்று யாது?
(1) விளையாட்டுக்கேனும் பொய்யுரைப்பதைத் தவிர்த்தல்
(2) தன் பக்கம் நியாயம் இருந்தும் வீண் தர்க்கத்தைத் தவிர்ப்பதற்காக விட்டுக்கொடுத்தல்
(3) அவசியமின்றி பொது இடங்களில் உரத்த குரலில் பேசுவதைத் தவிர்த்தல்
(4) ஒரு தட்டில் பலர் சேர்ந்து உண்ணும்போது பல பக்கங்களிலும் கையைவிட்டு அள்ளி உண்ணுதல்

36. பின்வருவனவற்றுள் ஸகாத்தின் நிபந்தனைகளின் அடிப்படையில் சரியான நடைமுறை யாது?
(1) பருவமடையாத பிள்ளையின் சொத்தைப் பராமரிப்பவர் அச்சொத்துக்குரிய ஸகாத்தை வழங்குதல்
(2) தானியம், பழவகை என்பவற்றுக்கு ஸகாத் வழங்க ஒரு வருடம் பூர்த்தியாகும் வரை காத்திருத்தல்
(3) பொதுச் சொத்துக்களுக்குரிய ஸகாத்தை வருட முடிவில் வழங்குதல்
(4) சுமார் 85 கிராமுக்குச் சமமான தங்கத்திற்கு 1/20 எனும் அளவில் ஸகாத் வழங்குதல்

37. கழாகத்ர் பற்றி ஒரு முஸ்லிமின் நம்பிக்கை எவ்வாறு அமைய வேண்டும்?
(1) அல்லாஹ் நாடியவையே நடைபெறும் எனும் நம்பிக்கையுடன், மனித செயல் சுதந்திரத்திற்கமைய, ஷரீஆவுக்குக் கட்டுப்பட்டுச் செயற்படல்
(2) கழாகத்ர் என்பது முற்றிலும் மறைவான ஓர் இரகசியம் என்பதனால் மனிதனுக்கு அதில் தெரிவுச் சுதந்திரம் இல்லையென நம்பிக்கை கொள்ளல்
(3) கழாகத்ர் சார்ந்த விடயங்களில் பகுத்தறிவை மாத்திரம் பயன்படுத்தி முடிவுகளைப் பெற்றுச் செயற்படல்
(4) மனித வாழ்வில் ஏற்படும் வெற்றி, தோல்விகளுக்கு மனிதர்களது சொந்த நடவடிக்கைகளே காரணமாகும் என நம்புதல்

38. பின்வரும் அட்டவணையில் 'அ' நிரலில் சில அறபுப் பதங்களும் 'ஆ' நிரலில் அவற்றின் விளக்கங்களும் தரப்பட்டுள்ளன.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| i. ஷிர்க் | A - இறைவனையும் இறைவழிகாட்டலையும் நிராகரித்தல் |
| ii. குப்ர் | B - அல்லாஹ்வின் தெய்வீகத் தன்மைக்கு ஏதேனுமொன்றை இணையாக்குதல் |
| iii. இல்ஹாத் | C - இஸ்லாத்தை விட்டு நீங்கி விடுதல் |
| iv. ரித்தத் | D - இஸ்லாத்தின் நம்பிக்கைகளையும் செயன்முறைகளையும் நிராகரித்தல் |

மேலுள்ள 'அ' நிரலுக்கு ஏற்ப 'ஆ' நிரல் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சரியான தெரிவு யாது?
(1) A, B, C, D (2) A, B, D, C (3) B, A, D, C (4) B, D, A, C

39. பின்வருவனவற்றை அவதானிக்குக.
A - நிய்யத்துடன் இஹ்றாம் அணிதல்
B - தல்பியா ஓதுதல்
C - அறபாவில் தரித்தல்
D - ஸம் ஸம் நீர் அருந்துதல்
E - ஸஃயு செய்தல்
F - தலைமுடி களைதல்

மேலுள்ளவற்றுள் ஹஜ்ஜின் பர்ளுகளை மாத்திரம் உள்ளடக்கிய தெரிவு யாது?
(1) A, B, D, E (2) A, B, D, F (3) A, C, E, F (4) B, C, D, F

40. பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள பெயர்களை அவதானிக்குக.

| | | |
|---|---|---|
| A - அஹ்மத் | B - கலீலுல்லாஹ் | C - ஹாஷிர் |
| D - ஸித்தீக் | E - ஆகிப் | F - துன்னூறைன் |
| G - மாஹீ | H - ஸைபுல்லாஹ் | I - அஸதுல்லாஹ் |

மேலுள்ளவற்றுள் நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் வேறு பெயர்களை மட்டும் உள்ளடக்கிய தெரிவு யாது?
(1) A, B, C, D (2) A, C, E, G (3) B, F, G, H (4) B, G, H, I

PAST PAPERS WIKI

* *

[பக். 5 ஐப் பார்க்க

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

16 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025(2026)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025(2026)
General Certificate of Education (Ord. Level) Examination, 2025(2026)

ඉස්ලාම් I, II
இஸ்லாம் I, II
Islam I, II

## இஸ்லாம் II

※ முதலாம் வினாவையும் வேறு நான்கு வினாக்களையும் தெரிவுசெய்து, மொத்தமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

※ முதலாம் வினாவின் விடைக்கு **20** புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **10** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** சுருக்கமான விடை எழுதுக.

(i) இஸ்லாத்தின் அடிப்படைச் சட்ட மூலாதாரங்கள் **இரண்டையும்** குறிப்பிடுக.

(ii) அல்-குர்ஆன் வசனங்கள் முதன்முதலில் (கி.பி) எத்தனையாம் ஆண்டளவில், எங்கு அருளப்பட்டன?

(iii) இஸ்லாம் வழங்கியுள்ள மனித உரிமைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(iv) நற்பண்புகளைக் குறிப்பதற்குப் பிரயோகிக்கப்படும் **இரண்டு** அறபுமொழிச் சொற்களைக் குறிப்பிடுக.

(v) ஸகாத் பெறத் **தகுதியற்றவர்களில் இரண்டு** பிரிவினரைத் தருக.

(vi) ஹஜ், உம்ரா ஆகிய இரண்டுக்கும் பொதுவான அர்கான்களில் (பர்ளுகள்) **இரண்டை** எழுதுக.

(vii) விவாக விலக்கின் பிரதான பிரிவான 'குல்உ' என்பது எதனைக் குறிக்கிறது?

(viii) இஸ்லாத்தில் இபாதத்களின் பிரதான நோக்கங்கள் **இரண்டைத்** தருக.

(ix) நபி இத்ரீஸ் (அலை), நபி நூஹ் (அலை) ஆகிய இருவராலும் அறிமுகம் செய்யப்பட்டதாக வரலாற்றாசிரியர் இப்னு கல்தூன் குறிப்பிடும் கைத்தொழில்கள் **இரண்டையும்** குறிப்பிடுக.

(x) இரண்டு விடயங்களைக் கொண்டே உதவி தேடுமாறு அல்-குர்ஆன் பணிக்கிறது. இபாதத்தோடும் நற்பண்புகளோடும் தொடர்புபட்ட **இவ்விரு** விடயங்களையும் தருக.

**2.** (i) 'ஸவ்ம்' என்பதனை வரைவிலக்கணப்படுத்துக.

(ii) நோன்பினால் ஏற்படும் லௌகீகப் பயன்கள் **மூன்றைக்** குறிப்பிடுக.

(iii) தொழுகையில் பேணுதலாக இருக்கும் மனிதர்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் கிடைக்கப்பெறும் நன்மைகள் **ஐந்தை** விளக்குக.

**3.** (i) இஸ்லாம் அனுமதித்துள்ள வர்த்தக முயற்சிகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(ii) உழைப்புக்கான முயற்சியின்போது ஒரு முஸ்லிம் தவிர்த்துக்கொள்ள வேண்டிய **மூன்று** விடயங்களைத் தருக.

(iii) இஸ்லாமியப் பொருளாதார முறையின் சிறப்பம்சங்கள் **ஐந்தைச்** சுருக்கமாக விளக்குக.

**4.** (i) அபூபக்ர் (ரழி) அவர்கள் முதலாவது கலீபாவாக நியமனம் பெறத் தகுதியானவர் என்பதை நியாயப்படுத்தும் **இரண்டு** நிகழ்வுகளைக் குறிப்பிடுக.

(ii) பெற்றோரின் நலன் பேணுவதன் அவசியம் பற்றி அல்-குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்களின் அடிப்படையில் விளக்குக.

(iii) ஒரு முஸ்லிமின் நாளாந்த நடவடிக்கைகள் 'இபாதத்' என்ற அங்கீகாரத்தைப் பெறுவதற்கான நிபந்தனைகளைத் தெளிவுபடுத்துக.

[பக். 6 ஐப் பார்க்க

**5.** (i) மறுமையில், "எந்த நிழலும் இல்லாத 'மஹ்ஷர்' வெளியில் 'அர்ஷின்' நிழலில் தங்குகின்ற வாய்ப்பைச் சில இளைஞர்கள் பெறுவார்கள்" என நபி மொழி குறிப்பிடுகிறது. அவ்வாறான இளைஞர்கள் இவ்வுலகில் எத்தகைய பண்பைக் கொண்டிருப்பர் என நபி (ஸல்) விளக்கினார்கள்?

(ii) நபி (ஸல்) அவர்களின் த.ஃவாப் பணியின் ஆரம்ப காலத்தில் அவர்களுக்கு உறுதுணையாக இருந்த இளைய ஸஹாபாக்களில் **மூவரின்** பெயர்களைத் தருக.

(iii) அலி (ரழி) அவர்கள் கலீபாவாக நியமிக்கப்பட்டதும் கிலாபத்தின் ஸ்திரத்தன்மையைப் பாதுகாக்க மேற்கொண்ட அவசர நடவடிக்கைகளில் **ஐந்தைக்** குறிப்பிட்டு, சுருக்கமாக விளக்குக.

**6.** (i) ஜாஹிலிய்யாக் காலத்தில் பிரபல்யம் பெற்றிருந்த சந்தைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(ii) நபி (ஸல்) அவர்கள் தமது சிந்தனையை முன்வைப்பதற்காகப் பயன்படுத்திய தொடர்பூடக முறைகள் **மூன்றைக்** குறிப்பிடுக.

(iii) அறிஞர் சித்திலெப்பை மேற்கொண்ட சமூக சீர்திருத்தப் பணிகள் **ஐந்தைச்** சுருக்கமாக விவரிக்குக.

**7.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) இயற்கை அனர்த்தங்களின்போது ஒரு முஸ்லிம் நிறைவேற்ற வேண்டிய கடமைகள்

(ii) இஸ்லாமிய நோக்கில் ஊடக தர்மம்

(iii) போதைவஸ்துப் பாவனையின் விபரீதங்கள்

(iv) இஸ்லாத்தில் உணவுப்பழக்கம்

* * *

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න